**சீடர்த்துவம்: அழைத்தல், தேர்வு செய்தல், அனுப்புதல்**

**ஜுன் 2014 அதிசா சிந்தனை மடல்**

**<u>சக்தியூட்ட தேர்வு செய்யப்படுதல்</u>**

**நோக்கம்:**

சீடர்கள் இயேசுவிடமிருந்து கற்றுக்கொண்டது மட்டுமின்றி அவரிடமிருந்து சக்தியையும் பெற்றனர். சீடர்கள் இயேசுவின் வார்த்தையின் வழியாக சக்தியை பெற்றதுமின்றி அவருடன் கூட இருந்ததின் வழியாவும் சக்தியை பெற்றனர். ஆண்டவர் நம்மை தேர்வு செய்ததினால் தான் நாம் நம் இதயத்தை தூய ஆவியினால் அனல் மூட்ட முடிகின்றது. எனவே தான் நாம் இயேசு கிறிஸ்துவின் நற்செய்திக்கு சிறந்த முறையில் சாட்சி பகிர முடிகின்றது.

**ஆரம்ப பாடல்:**
தூய ஆவியே அன்பின் ஆவியே துணையாளரே
தேற்றும் தெய்வமே ஊற்று தண்ணீரே உள்ளம் ஏங்குதய்யா
வரவேண்டும் வல்லவரே நல்லரே -2
*Thooya Aaviyae Anbin Aaviyae Thonaiyaalarae*
*Thetrum Theivamae Ootru Thanneerae Ullam Yengguthaiya*
*Varavendum Vallavarae Nallavarae -2*

ஆரம்ப ஜெபம்: (இயேசு நம் மத்தியில் வாசம் செய்ய நம்மில் ஒருவர் ஆரம்ப ஜெபத்தை செய்வோம்)

**1. வாழ்வை நோக்குதல்**



**டுப்ளின், மாட் தால்பட் அருகில் உள்ள தால்பட்டின் சிலை, பிப்ரவரி 2011**

வணக்கத்திற்குரிய மாட் தால்பட் (1856 - 1925)

இவருடைய வாலிப வயதிலிருந்து 28 வயது வரை மாட்-டின் வாழ்வில் மது இருந்தது. ஆனால் அது தொடங்கி அவருடைய வாழ்வில் முக்கிய நோக்கமாக இருந்தவர் இறைவனே. இவர் மே 2, 1856ல் பிறந்தார். 12 பிள்ளைகள் கொண்ட குடும்பத்தில் இவர் 2வது பிள்ளையாக சார்ல்ஸ் மற்றும் எலிசபெத் தம்பதியினருக்கு பிறந்தார். தம்முடைய 12வது வயதில் மாட்- டுக்கு முதல் வேலை கிடைத்தது. அது ஒரு மது பானம் விற்பனை செய்யும் கடை. இங்கு தான் இவருக்கு அதிகபடியான குடிப்பழக்கம் தொடங்கியது. அவரது சகோதர்கள் மற்றும் நண்பர்ளுடன் சேர்ந்து நகரில் விடுதிகளில் தன் பணத்தை விரயம் செய்து அதிக கடனுக்குள் தள்ளப்பட்டார். அவருடைய

பணம் விரயம் ஆனாவுடன் மற்றவர்களிடம் கடன் வாங்க தொடங்கினார். அவருடைய ஆடைகளையும் காலணிகளையும் விற்று அதில் கிடைக்கும் பணத்தைக் கொண்டு மதுபானத்தை வாங்குவார்.

ஒரு சமயம் தெருவில் இசைவாசித்துக்கொண்டிருந்த ஒருவருடைய பிடிலை திருடி விற்று மதுபானத்தை வாங்கினார். 1884ம் ஆண்டு, ஒரு மாலை பொழுதில் ஏழ்மையான நிலையில் பணம் ஒன்றும் இல்லாத நிலையில் மதுக்கடையின் முன்பு யாராவது தனக்கு அழைப்பு கொடுக்கமாட்டார்களா என்ற நம்பிக்கையுடன் நின்றுக்கொண்டிருந்தார். அவருடைய நண்பர்கள் பலர் அவரை கடந்து சென்றனர். ஆனால் யாரும் அவருக்கு அழைப்பு கொடுக்கவில்லை. இந்த சம்பவத்திற்கு பிறகு மிகவும் வெறுப்புணர்வுடன் தன் வீட்டிற்கு சென்று தன் தாயிடம் இனியும் தான் குடிக்கப் போவதில்லை என்று உறுதிமொழி எடுத்தார். ஒரு குருவானவனின் முன்சென்று 3 மாத காலமளவும் குடிக்கப் போவதில்லை என்று உறுதி மொழி செய்தார். பல முறை அவரால் 3 மாதங்கள் கட்டுப்படுத்த முடியாது என்று எண்ணிய அவர், தொடர்ந்து தன் உறுதி மொழியை வாழ்நாள் முழுவதும் மதுவை தொடாமல் தன்னை புதுபித்துக்கொண்டார் (41 வருடங்களுக்கு மேல்). ஜெபம், தவம் மற்றும் அன்றாட திருப்பலியில் பங்கெடுத்தல் வழியாக தன்னை பேணி காத்து வந்தார். ஜுன் 7, 1925ம் ஆண்டு மாட் தால்பட் இதய செயலிழப்பினால் நிலைக்குலைந்து இறந்து போனார். அவருடைய இறப்பிற்குப் பின் அவருடைய உடலில் மனமாற்றத்திற்கான சங்கலி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இந்த சங்கிலிகள் ஒரு தீவிர மனமாற்றத்தின் கோட்பாடு அல்ல, மாறாக இறைவனின் தாய், மரியாளின் மேல் இவர் கொண்ட பக்தியினால் தன்னை முழு அடிமைக்கோலத்தில் அர்ப்பணித்தார். ‘என்னால் இதனை செய்ய முடியும் என்றால் இறைவனின் அருளால் உங்களாலும் இதனை செய்ய முடியும்’ என்று மாட் மற்றவர்களுக்கு கூறினார். இரண்டாம் அருட் சின்னப்பர், மாட் தால்பட்-டை இறைவன் நமக்கு முன்னால் ஒரு எடுத்துக்காட்டாக வைத்து, இறைவனின் அருளை நம்பியுள்ள சாதாரண மனிதர்கள் அசாதாரண காரியங்களை செய்ய முடியும் என்று கூறினார்.

*சிந்தனை:*

- நீங்கள் தினசரி வாழ்க்கையில் மிக எளிய வழிகளில், ஆண்டவரால் அழைக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டு சக்தியூட்டப்பட்டு இறைவனுக்கு சாட்சியாக உள்ள மற்ற சாதாரண மக்களை குறித்து கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

- ஆண்டவர் என்னை அழைத்து தொடர்ந்து சக்தியளிக்கிறார் என்பதை உண்மையாகவும் உறுதியாகவும நம்புகின்றேனா?

***2. இறைவனுக்குச் செவிமடுத்தல்: யோவான் 14: 23-26***

அதற்கு இயேசு பின்வருமாறு கூறினார்; "என்மீது அன்பு கொண்டுள்ளவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பார். என் தந்தையும் அவர்மீது அன்பு கொள்வார். நாங்கள் அவரிடம் வந்து

அவருடன் குடிகொள்வோம். என்மீது அன்பு கொண்டிராதவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பதில்லை. நீங்கள் கேட்கும் வார்த்தைகள் என்னுடையவை அல்ல; அவை என்னை அனுப்பிய தந்தையுடையவை. உங்களோடு இருக்கும்போதே இவற்றையெல்லாம் உங்களிடம் சொல்லிவிட்டேன். என் பெயரால் தந்தை அனுப்பப்போகிற தூய ஆவியாராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத் தருவார்; நான் கூறிய அனைத்தையும் உங்களுக்கு நினைவூட்டுவார்.

*சிந்தனை:*

- *நாம் இரண்டு முறை இவ்வாசகத்தை படிப்போம்*
- *வார்த்தையை அல்லது குறுகிய வசனத்தை தேர்ந்தெடுக்கவும். 3 முறை சத்தமாக ஜெப சிந்தனையுடன் ஒன்று மற்றொன்றுக்கு இடையில் நிறுத்தி வாசிக்கவும்.*
- *நாம் தேர்ந்தெடுத்த வார்த்தையை கேட்பதற்கு 2 நிமிடம் அமைதி காப்போம்.*
- *நமக்கு தொட்ட வார்த்தையை பகிர்வு செய்வோம்.*

### *3. அன்பில் வாழ்வோம்:*

- *என் அனுதின வாழ்க்கையில் எவ்வாறு இறைவனின் பெலத்தை பெறமுடியும். இறைவன் ஒவ்வொருவர் மேலும் வல்லமையை பொழிந்திட, தனிப்பட்ட எளிய உறுதி மொழியை எழுதவும். (உறுதியான செயல்திட்டத்தை எழுதவும்)*

- *இந்த வட்டாரத்தில் வாழும் மக்களிடையே நற்செய்தியை கொண்டு செல்ல சிறு குழுவாக நாம் என்ன செய்யலாம்? (எடுத்துக்காட்டாக தந்தையர் தின வாழ்த்து அட்டையை ஒவ்வொரு குடும்பத்திற்கும் அனுப்பலாம்)*

### *இறுதி ஜெபம்:*

*நாம் தொடர்ந்து திருச்சபை, உலகம் மற்றும் நாடுகளின் தேவைகளுக்காக மன்றாடுவோம்.*

*பரிசுத்த ஆவியானவரிடம் மன்றாடுவோம்.*

### ***<u>இறுதி பாடல்: உன்னதத்தின் ஆவியை</u>***

உன்னதத்தின் ஆவியை
உந்தன் பக்தர் உள்ளத்தில்
ஊற்ற வேண்டும் இந்த நாளிலே
உலகமெங்கும் சாட்சி நாங்களே

1. பெந்தெகோஸ்தே பெருவிழாவிலே
   பெருமழைபோல் ஆவி ஊற்றினீர்
   துயரமான உலகிலே
   சோர்ந்து போகும் எங்களை
   தாங்க வேண்டும் உந்தன் ஆவியால்

2. ஆவியின் கொடைகள் வேண்டுமே
   அயல் மொழியில் துதிக்க வேண்டுமே
   ஆற்றலோடு பேசவும்
   அன்பு கொண்டு வாழவும்
   ஆவி ஊற்றும் அன்பு தெய்வமே

*Unnathathin Aaviyai Unthan Pakthar Ulalthil*
*Ootra Vendum Intha Naalilae*
*Ulagamenggum Saatchi Naanggalae*

1. *Pentecoste Peruvilavilae Perumalai Poel Aavi Ootrineer -2*
   *Thoyaramaana Ulagilae Sornthu Pogum Enggalai -2*
   *Thangga Vendum Unthan Aayiyaal -2*

2. *Aaviyin Kodaigal Vendumae Ayal Moliyil Thuthikka Vendumae -2*
   *Aatraloedu Pesavum Anbu Kondu Vaalavum -2*
   *Aavi Ootrum Anbu Theivamae -2*

***திருவழிப்பாடு: பெந்தகொஸ்தே பெருவிழா (8 ஜுன் 2014)***